# பெரும்பரப்புத் தொற்றுநோய் தயார் நிலை திட்ட விபரத்தாள்

## பீல் சபையின் பெரும்பரப்புத் தொற்றுநோய் திட்டம் மாணவர்களினதும் பணியாளர்களினதும் பாதுகாப்பை மையமாக கொண்டுள்ளது

---

***பெரும்பரப்புத் தொற்றுநோய் (பன்டெமிக்) என்றால் என்ன?***

துரிதமாக பரவும் எத்தொற்று நோயும் பெரும் பரப்புத் தொற்றுநோய் எனப்படும். பெரும்பரப்புத் தொற்றுநோய் நிகழக் கூடிய ஒரு வடிவம் இன்புளுவன்சா – பெரும்பரப்புச் தொற்றுச்சளிக்காய்ச்சல், இது ஒரு புதுவகை அதிகமாகத் தொற்றக்கூடிய அதி நுண்னுயிர் (Viral) மூச்சு நலக் குறைபாடு. இது காச்சல் வைரசில் ஒரு புதிய இயற்கூறு (strain) தோன்றி துரிதமாக பரவும் போது நிகழக்கூடியது. இப்புதிய வைரசின் தாக்கத்திற்கு மனிதரிடத்தில் எதிர்ப்பு சக்தி சொற்பமாகவோ அல்லது முழுமையாக இல்லாமலோ இருக்கும்.

***எப்போது இப் பெரும்பரப்புத் தொற்றுநோய் நிகழலாம்?***

வல்லுநர்களால் எப்போது அடுத்த பெரும்பரப்புத் தொற்றுநோய் நிகழும் என்பதை முன் கூட்டியே கூற முடியாது, ஆனால் வரலாற்று ரீதியாக ஒவ்வொரு 100 வருடங்களில் மூன்று அல்லது நான்கு தடவைகள் அவை நிகழும். உலக சுகாதார நிறுவனமும், மத்திய, மாகாண, பிரதேச சுகாதார அமைப்புகளும் பெரும்பரப்புத் தொற்றுநோய்த் தயார் நிலை திட்டமிடலை ஆரம்பித்துள்ளன.

***எவ்வளவு மக்கள் பாதிக்கப்படுவர்?***

பெரும்பரப்புத் தொற்றுநோய் நிகழும் காலத்தின் சில கட்டத்தில் 40ல் இருந்து 60 வீதமான பணியாளர்கள் வேலைக்கு வராமல் இருக்க சாத்தியமுண்டு என நிபுணர்கள் கூறுகின்றனர். கணிசமான வரவின்மை பீல் சபையினால் வழங்கப்படும் சேவைகளை நீக்க வழி வகுக்கலாம்.

***பீல் சபையின் பெரும்பரப்புத் தொற்றுநோய்த் திட்டம் என்ன?***

பெரும்பரப்புத் தொற்றுநோய் ஒன்றிற்கு பீல் சபை மிகவும் தயாராக உள்ளது. பீல் சபை அதன் பாடசாலைகளுக்கும் வேலைத்தளங்களுக்கும் 2005-6 பாடசாலை வருடத்தில் ஒரு பெரும்பரப்புத் தொற்றுநோய்த் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தை பீல் சுகாதார, மற்றும கல்வி, சுகாதார அமைச்சுக்களுடனும் சபையின் பணியாளர் சம்மேளனத்துடனும், தொழிற்சங்கங்களுடனும் இணைந்து பீல் சபை உருவாக்கியுள்ளது.

ஒன்ராரியோ மாகாணத்தில் பெரும்பரப்புத் தொற்றுநோய் என உறுதிப்படுத்தப்படின், பீல் சபை பெரும்பரப்புத் தொற்றுநோய்த் திட்டத்தை செயல்படுத்தும். ஒரு குறிப்பிட்ட நிலைமயினால் உடலுக்கு ஏற்படும் ஆபத்தை மதிப்படும் திறமை வாய்ந்த மாகாண மற்றும் பிரதேச சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளையும் வழிகாட்டிகளையும் பெரும்பரப்புத் தொற்றுநோய்க் காலமொன்றில் பீல் சபை கடைபிடிக்கும்.

ஒன்ராரியோ பொது சுகாதார அதிகாரிகள் கூறினால் அன்றி பாதுகாப்பாக இருப்பின், பெரும்பரப்புத் தொற்றுநோய்க் காலத்தில் பாடசாலைகளை தொடர்ந்து நடத்துவதே எமது முதன்மையாகும். பணியாளர்களினதும், மாணவர்களினதும் ஆரோக்கிய பாதுகாப்பு குறித்து கரிசனை ஏற்படின் பாடசாலையையும் அதன் வேலைத் தளங்களையும் மூடுவதை சபை கருத்தில் கொள்ளும்.

***செயற்பாடுகள் வழமை போல் பெரும்பரப்புத் தொற்றுநோய்க் காலத்தில் தொடர்ந்து நடைபெறுமா?***

பெரும்பரப்புத் தொற்றுநோய் ஒன்ராரியோ மாகாணத்திற்கு வெளியேயாயின் பீல் சபை வழமையான சேவைகளை தொடர்ந்து வழங்குவதுடன் வழமை போல் இயங்கும். ஒன்ராரியோ மாகாணத்தில் பெரும்பரப்புத் தொற்றுநோய் என பிரகடனப்படுத்தப்பட்டவுடன் சபை அதன் பெரும்பரப்புத் தொற்றுநோய் தயார் நிலைத்திட்டத்தை செயற்படுத்தும். அதன் காரணமாக பல செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்றாலும் அவை முற்றிலும் வேறு வழியில் இயங்கக்கூடும். ஒன்ராரியோ மாகாணத்தில் பெரும்பரப்புத் தொற்றுநோய் என பிரகடனப்படுத்தப்பட்ட காலத்தில் பாடசாலைகள் திறந்திருந்தாலும், வழமையான செயல்முறை எதிர்பார்ப்புக்களும் சேவைத் தரங்களும் கிடையாமல் இருக்கக்கூடும்.

***ஒன்ராரியோவில் பெரும்பரப்புத் தொற்றுநோய் என பிரகடனப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் எச்செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறும்?***

ஒன்ராரியோவில் பெரும்பரப்புத் தொற்றுநோய் என பிரகடனப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் மேலே அடையாளம் காட்டப்பட்டவாறு பல செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெறும். ஆனால் இச்செயல்பாடுகள் முற்றிலும் வேறு வழியில் இயங்கக்கூடுமாகையால் வழமையான சேவைத் தரங்கள் கிடையாமல் இருக்கும். பின்வரும் செயற்பாடுகளை செய்வது பொருத்தம் என கருதினால் நாம் அவற்றை தொடர்ந்து செய்யமுடியும் என நம்புகின்றோம்

- அறிவுரை, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல்
- மாணவர் போக்குவரத்து - பாடசாலைகள் திறந்திருக்கும் சமயத்தில் பேரூந்துகள் வழமையான நேர அட்டவணைகளின்படி இயங்கும்.
- குழந்தைப் பராமரிப்பு - பாதுகாப்பு இல்லையென்றால் அன்றி சேவை வழங்குபவர்கள் தொடர்ந்து சேவை வழங்குவர்.
- சந்தர்ப்பத்தில் உதவும் ஆசிரியர்கள் - நிர்வாகிகள், சந்தர்ப்பத்தில் உதவும் ஆசிரியர்களை ஏற்ற தரங்களில் இடத்தை நிரப்பவும் பாடசாலைகளின் மேற்பார்வையை உறுதிப்படுத்தவும் கொண்டு வருவர்
- தொண்டர்கள் - பீல் பாடசாலைகளின் வழமையான செயற்பாடுகள் ஒழுங்காக மீளாய்வு செய்யப்படும்
- சிற்றுண்டி சேவைகளும் விருந்தோம்பல் திட்டங்களும்
- பராமரிப்புச் சேவைகள் - வெப்பமூட்டுதல், குளிர் சாதனப்படுத்தல், குழாய் திருத்த வேலைகள், மின்சாரமும் கணினி திருத்தலும் உட்பட
- கழிவுப்பொருள் சேகரித்தல்
- இட பாவனை பாதுகாப்பு - பாடசாலைகள் மூடப்பட்டால் மேலதிக சுற்றுகாவலர் பாதுகாவல் பணியில் ஈடுபடுத்தப்படுவர்
- சபை கூட்டங்கள் - அடிக்கடியும்/அல்லது மின்அஞ்சல் வழியாகவும் நடைபெறலாம்.
- அவசர கால சம்பவ பொறுப்பு குழுக்கள் - இயங்கும், ஆனால் வழமையான முறையில் பணியில் அமர்த்தப்படமாட்டார்கள்
- தேவைப் பொருட்கள் அனுப்பக் கோருதல்
- உள்ளக தொடர்பாடலும், அச்சிடுதலும்

***ஒன்ராரியோவில் பெரும்பரப்புத் தொற்றுநோய் பிரகடனப்படுத்தப்பட்ட காலப்பகுதில் எச்செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்படும்?***

அதி முக்கிய சேவைகளை சமூகத்திற்கு வழங்குவதற்காக பின்வரும் செயல்முறைகள் பெரும்பரப்புத் தொற்றுநோய் நேரத்தில் தற்காலிகமாக நிறுத்தப்படும்

- பாடத்திட்டத்திற்கு வெளியான செயற்பாடுகள்
- பாடசாலை - தொடர்பான உணவுத்திட்டங்கள் - பீட்சா (Pizza) நாட்கள் போன்றவை
- களப்பயணங்கள்/சுற்றுலாக்கள் (Field trips/Excursions) - ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட பெற்றோர் கட்டணம் செலுத்தியவைகள் உட்பட கள பயணம்/சுற்றுலா யாவையும் ரத்து செய்யப்படும்
- பாடசாலை மன்றக் கூட்டங்கள் - அதிபர், பாடசாலை மன்றத் தலைவருடன் ஒழுங்கான தொடர்பு கொண்டவாறு இருப்பார்
- துறைசார் செயற்திறன் விருத்தி செயற்பாடுகள்
- ஊழியர் கூட்டங்கள் - பாடசாலைக்கு வெளியேயான ஊழியர்கள் அல்லது நிர்வாகிகள் பங்கு கொள்ளும் கூட்டங்கள் ரத்து செய்யப்படும் அல்லது தொலைபேசி கலந்தாய்வு மூலம் நடத்தப்படும்
- பாடசாலை நேரத்திற்கு பின்பான பாடசாலை அனுமதிப்பத்திரங்கள் - ஏற்கனவே உள்ள மற்றும் புதிய பாடசாலை இடப்பாவனை அனுமதிப் பத்திரங்கள்
- தொடர் கல்வியூட்டல் - இரவுப் பாடசாலை, கோடைகால பாடசாலையும் சர்வதேச மொழித்திட்டங்களும்
- சமுதாயம் பாடசாலையைப் பாவித்தல் - பாடசாலை முடிந்த பிற்பாடு நடைபெறும் செயற்பாடுகள்/சமுதாயம் பாடசாலைகளில் கற்பதற்கு வாய்ப்புகள்
- இல்ல அறிவுறுத்தல்கள்

***ஒன்ராரியோவில் பெரும்பரப்புத் தொற்றுநோய் என பிரகடனப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் நடை பெறுகின்றவற்றை பீல் சபை அதன் பணியாளர்களுக்கும், சமுதாயத்திற்கும் எவ்வாறு அறிவிக்கும்?***

பீல் சபை அதன் திட்டங்களை அவ்வப்போது எல்லா பணியாளர்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் மற்றும் சமூக அங்கத்தவர்களுக்கும் அறிவிப்பதை உறுதிப்படுத்துவதில் உறுதிகொண்டுள்ளது. ஒன்ராரியே மாகாணத்திற்கு வெளியே பெரும்பரப்புத் தொற்றுநோய் என பிரகடனப்படுத்தப்பட்ட காலப்பகுதியிலும், ஒன்ராரியோவில் பெரும்பரப்புத் தொற்றுநோய் என உறுதி செய்யப்பட்ட காலப்பகுதியிலும் சபை அதன் அவையோர் யாவரும் பெரும்பரப்புத் தொற்றுநோய் வருமுன்னும், பெரும்பரப்புத் தொற்றுநோயின் போதும் நடைபெறுபவை பற்றி அறிந்து கொள்ள, உறுதி செய்ய ஒரு தெளிவமைந்த செய்தி தொடர்புத்திட்டத்தை உருவாக்கியுள்ளது.

ஒன்ராரியோவில் பெரும்பரப்புத் தொற்றுநோய் என பிரகடனப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் முழுவளவிலான விபரங்களையும் பாடசாலைகள் நிலைமை பற்றிய விபரங்களையும் சபை இரு பிரதான வழிகளில் வழங்கும். அவையாவன: பீல் சபையின் இணையத்தளம் - www.peelschools.org, மற்றும் ஒரு பெரும்பரப்புத் தொற்றுநோய் தொலைபேசி இலக்கமுமாகும்.

வருகின்ற மாதங்களில் நாம் தொடர்ந்து பெரும்பரப்புத் தொற்றுநோய் தயார் நிலைத் திட்டத்தை செய்வதுடன் புதிய விபரங்களை உங்களுடன் தொடர்ந்து பகிர்ந்து கொள்வோம்.